

FREE EDITION

August - 2018

# ஜோதி

# Jothi
## Spiritual Newsletter

ஜோதி 12 : சுடர் 06 -138

## ஆன்மிகச் செய்திச்சுடர்

### மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

### ஆடிப்பூர பெருவிழா
கஞ்சி வார்த்தலும்
சுயம்பிற்கு பாலாபிடேகமும்

**மெல்பேர்ண்:** விக்டோரியா மாநிலம்

**19.08.2018** காலை 10.00 மணி
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.- Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)
மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு
ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் (2193)

●●●

**12.08.2018 10.00மணி**
**Highvale Secondary College**
Capital Avenue - Glen Waverley 3175
மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி
வார வழிபாட்டு மகளிர் மன்றம்

**சிட்னி:** நியுசவுத்வேல்ஸ் மாநிலம்

**17.08.2018** 6.00மணி
Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140
மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி
சித்தர்பீட சிட்னி சென்டர்

●●●

**12.08.2018** 4.30மணி
Westmead Public Primary School
Moree Street – Westmead
மேல்மருவத்தூர் அருள்மிகு அன்னை
ஆதிபராசக்தி
சித்தர்பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம்

**பிரிஸ்பேர்ண்:** குயின்ஸ்லாண்ட் மாநிலம்
**25.08.2018** 4.00மணி
Sunnybank RSL Hall
19 Gager St. – Sunnybank – QLD
மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி
குயின்ஸ்லாண்ட் மன்றம்

## ஒரு சிறுமிக்குக் கிடைத்த காட்சி

**த**ஞ்சை மாவட்டத்தே உள்ளது திருவெண்காடு. பழம்பெருமை வாய்ந்த ஊர் இது. பட்டினத்தார் வாழ்ந்த ஊர். பாடல் பெற்ற தலம் இது. எங்கள் ஊரில் ஆதிபராசக்தி சித்தர் வார வழிபாட்டு மன்றம் அமைத்து அம்மா பணி செய்து வருகிறோம்.

எங்கள் மன்றத்தின் பொருளாளராக இருப்பவர் சக்தி வெங்கடாசலம். காவல்துறையில் பணி செய்து ஓய்வு பெற்றவர். 70 வயதைக் கடந்தவர். இவர் மனைவி சாரதாம்பாள். இருவரும் திருவெண்காடு வடக்கு வீதியில் வசித்து வருகிறார்கள்.

**சக்தி செல்வராஜ் - திருவெண்காடு**

இருவரும் மன்றத்திற்கு வந்து தொண்டு செய்பவர்கள். செவ்வாய், வெள்ளி, பௌர்ணமி நாட்களில் மதியம் மூன்று மணிக்கு வந்து மன்றத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்து, பூசைப் பாத்திரங்களைத் துலக்கி அம்மா படத்தைத் துடைத்து, பொட்டு வைத்து, மலர் பறித்து, மாலை தொடுத்து, அன்னைக்கு அலங்காரம் செய்து, வழிபாடு இயற்றி, இரவு 8.00 மணியளவில் பிரசாதங்களைக் கொடுத்துவிட்டு, வாழ்த்து முடிந்தவுடன் தான் வீட்டிற்குத் திரும்புவார்கள்.

மன்ற நாட்களில் சக்தி வெங்கடாசலம் மட்டும் காலையிலும் மாலையிலும் மன்றத்திற்கு வந்து சுத்தம் செய்து விளக்கேற்றி வைத்துத் தீபாராதனை செய்துவிட்டு 7.30 மணிக்கு வீட்டிற்குப் போவார்.

வெளியூர் போகும் நாட்களில் மன்றத் தொண்டர்களிடம் மன்றத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுத்தான் போவார்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

### அன்னையின் அருள்வாக்கு

**ஆடிப்பூர**

**கஞ்சியின் மகிமை**

**“ஆரம்பத்திலிருந்து கஞ்சி எடுக்கிறீர்கள் ஆனால் ஒருவித மயக்கம் இப்போதுதான் உங்களில் சிலருக்கு மட்டும் ஏற்பட்டுள்ளது. இப்போதுதான் எனது சுடர் உங்களுக்குக் கிடைத்துள்ளது.”**

அன்னையின் அருள்வாக்கு:

**“குதிரைக்குக் கடிவாளம் இல்லையேல் தறிகெட்டு ஓடும். அதுபோல ஆன்மிகமும் தருமமும் இல்லையென்றால் வாழ்க்கையும் தறிகெட்டுப் போகும்.”**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

Search by: "Jothi Sudar"

## செய்திச்சுடரில்...


ஒரு சிறுமிக்குக் கிடைத்த காட்சி
Page: 1 – 3

தேரை வாய் அகப்பட்ட பாம்பு
Page: 4

UPCOMING EVENTS
Melbourne: 13, 15
Sydney: 8, 12
Brisbane: 7

திருமதி அம்மா பதில்கள்
பக்கம்: 5

செய்வினை அழித்த குடும்பநல வேள்வி
பக்கம்: 9, 10

Divine Miracles
Page:11

சித்தர்பீட விழாக்கள்
பக்கம்: 12

ஆன்மிக நாட்குறிப்பு
பக்கம்: 16


# ஒரு சிறுமிக்குக் கிடைத்த காட்சி ...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ஒரு நாள் வெள்ளிக்கிழமை சக்தி வெங்கடாசலமும், சக்தி சாரதாம்பாளும் வழிபாடு முடிந்து திரும்பினார்கள். அன்று இரவு 9.00 மணியளவில் ராஜ் டி.வியில் ஆன்மிக குரு அடிகளார் அவர்களின் 54ஆம் பிறந்த நாள் விழாவை ஒளிபரப்புவதாகக் கேள்விப்பட்டு, அதைப் பார்க்க வேண்டி இருவரும் வடக்கு வீதியில் இருக்கும் ஜெய்சிங் என்ற ஆசிரியர் வீட்டிற்குச் சென்றுவிட்டனர்.

சக்தி வெங்கடாசலத்தின் உறவுக்காரச் சிறுமியான 11 வயதுப் பெண் ராதிகா. ஏழாம் வகுப்பு படித்து வருகிறாள். அவளுடைய வீடு வெங்கடாசலத்தின் வீட்டின் பின்புறத்தில் இருக்கிறது. பள்ளிக்கூடம் போகிற நேரம், படிக்கிற நேரம், சாப்பிடுகிற நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் தாத்தா! தாத்தா! என்றே வெங்கடாசலத்தைச் சுற்றி வருவாள். இந்த முதிய தம்பதியர்க்கு இவள் மேல் கொள்ளை அன்பு.

ராதிகா வீட்டிலும் டி.வி. இருக்கிறது. அதிலே வேறு படம் காட்ட ஏற்பாடு. அந்தப் படத்தைப் பார்க்க தாத்தா வெங்கடாசலத்தை அழைத்துப் போக வேண்டி, கையில் டார்ச் லைட்டோடு வெங்கடாசலம் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாள் ராதிகா.

வெங்கடாசலம் வீட்டுக் கொல்லையில் கிணறு ஒன்று இருக்கிறது. அதன் பக்கம் தென்னை மரம் ஒன்றும் அதன் எதிரே வைக்கோல் போரும் இருக்கிறது. இந்த வழியாக அவள் டார்ச் லைட் அடித்துக் கொண்டு வரும்போது தான் அந்த அற்புதம் நடந்தது.

டார்ச் லைட் வெளிச்சத்தில் அந்தத் தென்னை மரத்தின் கீழே நீண்ட நெடிய உருவத்துடன் அம்மா நிற்கிறாள். மஞ்சள் நிற சேலை, நீண்டு தொங்கும் கூந்தல், நெற்றியில் திருநீற்றுக் கீற்று, நடுவே செந்தூரத் திலகம், கழுத்தில் நீண்டு தொங்கும் எலுமிச்சம்பழ மாலை, இரண்டு கரங்கள்! வலது கையை நீட்டி வா! வா! என்று அழைக்கிறாள் அந்த அகிலாண்ட நாயகி.

பாவம் அந்தப் பேதைச் சிறுமி இந்தக் காட்சி கண்டு அச்சம் அடைந்து ஓடி விடுகிறாள்.

மீண்டும் ஆதிபராசக்தி அவள் முன்னே...! அந்த வைக்கோல் போர் முன்பாக நின்று பரிவு காட்டி அழைக்கிறாள். மீண்டும் அந்தச் சிறுமிக்கு பய உணர்ச்சியே மேலோங்குகிறது. டார்ச்சு லைட்டை அந்த கிணற்றுக்குப் பக்கத்தில் போட்டுவிட்டு ஓடி வந்து விட்டாள் அந்தப் பேதைப்பெண்.

மீண்டும் அற்புத நிகழ்ச்சி நடக்கிற அதே வேளையில்... சக்தி வெங்கடாசலமும், சாரதாம்பாளும் டி.வி. பார்க்கிற போது அதில் சுயம்பாக அன்னைக்கு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைக் காட்சிகள் அந்தச் சின்னத் திரையில் ஓடிக்கொண்டு இருக்கின்றன.

இந்த அபிஷேகத்திற்கும், ஆராதனைக்கும் உரியவள் நம் வீட்டுக் கொல்லைப் புறத்தில் வந்து விளையாடுகிறாள் என்பது தெரியாமலேயே அந்த முதிய தம்பதிகள் டி.வி.யின் நிகழ்ச்சிகளில் மூழ்கியிருக்கிறார்கள்.

மறுநாள் சனிக்கிழமை! செல்வி ராதிகா, சக்தி வெங்கடாசலம் வீட்டிற்கு வந்தாள். மேற்படி நடந்த சம்பவத்தைப் பார்த்து மிரண்டு போய் இருந்தாள். அவள். அதை நினைத்த அளவில் அழுகையே வந்துவிட்டது.

"ஏன் பாப்பா அழறே? வீட்டில் என்ன நடந்தது? அப்பா ஏசினாங்களா? அம்மா ஏசினாங்களா?" என்று இருவரும் அந்தச் சிறுமியைத் துருவித் துருவிக் கேட்டார்கள். அந்த அற்புத நிகழ்ச்சியைத் திக்கித் திணறி விவரித்தாள் அந்தச் சிறுமி! .

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

# ஒரு சிறுமிக்குக் கிடைத்த காட்சி . . .

(2ஆம் பக்க தொடர்ச்சி)

அந்தச் சிறுமி சொல்லச் சொல்ல இருவரது கண்களும் வியப்பால் விரிகின்றன.

“பாப்பா! நீ அதிர்ஷ்டக்காரி! சாமியே உன் கண்முன் வந்து கூப்பிட்டிருக்கிறது! மன்றத்திற்கு வந்து கும்பிடுகிறாயே.. அந்தச்சாமி தான்! அந்த அம்மா தான் நேற்று உனக்குக் கண் முன்னே வந்திருக்கிறது. பைத்தியக்காரப் பெண்! பயந்து ஓடி விட்டாயே!

எனக்கும் பாட்டிக்கும் கண் முன்னே வந்தாளா பார்த்தியா? உனக்குத் தான் அந்த அதிர்ஷ்டம்! கொடுத்து வைத்த பெண்!” என்று சொல்லிச் சொல்லித் தேற்றினார் சக்தி வெங்கடாசலம்.

நமக்கு அம்மா காட்சி தராமல் போய்விட்டாளே என்பது சக்தி வெங்கடாசலத்திற்கு வருத்தமாகத் தான் இருக்கிறது. நாங்கள் அவருக்கு ஆறுதல் வார்த்தைகள் சொன்னோம்.

“நீங்கள் செய்கிற தொண்டு அம்மாவிற்குத் தெரியாமல் இல்லை. உங்கள் கொல்லையில்தானே அந்த அற்புதம் நடந்தது? நீங்களும் நாள் தவறாமல் மன்றத்திற்கு வந்து தொண்டு செய்தபடி இருக்கிறீர்கள். உங்களுக்கு உரிமையான இடத்தில் திருவடி பதித்தாள்! அந்தச் சிறுமியின் பக்திக்குக் காட்சி கொடுத்தாள்! அவள் கணக்கு யாருக்குப் புரியும்? யாருக்குத் தெரியும்?” எனக்கூறி ஆறுதல் படுத்தினோம்.

மேல்மருவத்தூரில் வந்திருப்பவள் யார்? ஆதிபராசக்தி! தெய்வங்களுக்கெல்லாம் தெய்வமாய் இருப்பவள்! இவளை யார் யாரெல்லாம் தொழுது வழிபடுகிறார்கள் தெரியுமா? அபிராமிபட்டர் பாடுகிறார்.

சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், இந்திரன், பிரம்மா, விஷ்ணு, சிவன், அகத்திய முனிவன், முருகன், கணபதி, மன்மதன் முதலிய நல்வினையுடைய அனைவரும் வந்து வணங்கிச் செல்கிறார்களாம்.

“ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர் தங்கோன்
போதில் பரமன் புராரி முராரி பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே!”
என்கிறது அபிராமி அந்தாதி!

அன்றொரு நாள் திருக்கடவூர் அபிராம பட்டனுக்காகத் திங்கள் எழச் செய்தவள்.

குமரகுருபரன் பாட்டிற்கு உவந்து திருமலை நாயக்கன் அவையில் வந்து முத்து மாலை பரிசு கொடுத்து மறைந்தவள்.

மூகன் என்ற ஊமையைக் கவிஞனாக்கியவள்! ஆடு மேய்த்த இடையனை உலகம் புகழும் காளிதாசக் கவிஞனாக்கியவள்!

‘பிரும்மம் மட்டுமே சக்தியம்!’ என இறுமாந்து பேசிய தோத்தாபுரி என்ற வேதாந்தியின் அறியாமையைப் போக்கிப் பாடம் புகட்டியவள்.

சீர்காழிச் சம்பந்தனுக்கு நீ தாளம் தந்தாலும் ஓசையைக் கொடுப்பவள் நான் தான் என்று சிவனுக்கே உணர்த்தியவள்.

‘பிரும்மம் வேறு. நான் வேறல்ல’ என்று பகவான் இராமகிருஷ்ணர் மூலம் உலகத்திற்குப் பாடம் புகட்டியவள்.

இவர்களையெல்லாம் தன் அம்சங்களாகப் பெற்றவள் யாரோ அந்த மூலப்பரம்பொருள் தான் இன்று மேல்மருவத்தூரில் வந்து விளையாடுகிறாள்.

அடிகளார் என்ற மானுட வடிவினைத் தாங்கி உலாவுகிறாள்.

ஒருபுறம் மாயையால் தன்னை மறைத்துக்கொண்டும் விளையாடுகிறாள். இன்னொருபுறம் அவனவன் கண்களை மாயையால் மறைத்தும் விளையாடுகிறாள். அவனவனையும் அவனவன் விதியின் போக்கில் ஆடவிட்டு வேடிக்கையும் பார்க்கிறாள்.

கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளங்கொண்ட ஆத்மாக்களுக்கு மட்டுமே இவள் தன் இருப்பைப் புலப்படுத்துவாள்.

செவ்வாடைத் தொண்டர் குலம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஓம் சக்தி!

# தேரை வாய் அகப்பட்ட பாம்பு!

“பாம்பின் வாய்ப்பட்ட தேரை” என்றுதான் இதுவரை சொல்லக்கேட்டிருக்கிறோம். அன்னையில் திருவருள் சக்தி இந்த உவமையையே மாற்றித் “தேரை வாய் அகப்பட்ட பாம்பு போல” என்று சொல்லும்படி அற்புத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

நமது சித்தர் பீடத்தின் வேள்விக்குழு தொண்டர்களுள் ஒருவர் சக்தி கன்னியப்பன். அமைதியும், அடக்கமும் நிறைந்த தொண்டர். பழகுவதற்கு இனிமையானவர். மின் வாரியத்தில் பணி புரிந்து வருபவர். விடுமுறை நாட்களில் எங்கெல்லாம் வேள்விக்குழு அனுப்பி வைக்கிறதோ, அங்கெல்லாம் சென்று வேள்வித் தொண்டு புரிந்து வருபவர் அவர்.

“என் பணியை நீ செய்! உன் பணியை நான் பார்த்துக் கொள்கிறேன்” என்று நம் அம்மா சொல்லியிருக்கிறாள் அல்லவா! அதனை மனதார நம்பிப் பணி செய்து வருபவர் அவர்.

அவருடைய தொண்டிற்கு எப்போது தடங்கல் வந்தாலும், “அம்மா! தாயே அருள் புரிவாயே!” என்று வேண்டிக் கொள்வாராம். தடங்கல் எதுவாயிருந்தாலும் அம்மா அதனை விலக்கி விடுவாளாம்.

வேள்விச் சக்கரம் வரைவதற்காக நூலை அளந்து பிடிக்கும்போதே, “அம்மா! தாயே அருள் புரிவாயே!”என்று வேண்டிக் கொண்டுதான் நூல் பிடிப்பாராம். வேள்விப் பூசை என்றாலே பய பக்தி அதிகம் வேண்டும் . சிரத்தை வேண்டும். அவரிடம் இவை உண்டு.

வழக்கம் போல ஒரு நாள் அவர் அலுவலகத்துக்குச் சென்று விட்டார். அவர் மனைவி, அம்மா கோயிலுக்கு வந்து விட்டார். வீட்டில் வயது வந்த பெண்ணும், சிறுபிள்ளைகளுமே இருந்திருக்கிறார்கள். பெரியவர்கள் யாரும் இல்லை.

அன்று எங்கிருந்தோ வந்த பாம்பு ஒன்று அவரது வீட்டிற்குள் நுழைந்து விட்டது. சுமார் இரண்டு அடி நீளமுள்ள பாம்பு அது! பிள்ளைகள் பார்த்து அலறியிருக்கின்றார்கள். “ஓம் சக்தி! ஓம் சக்தி!” என்று பயந்து கூவியிருக்கிறார்கள்.

அந்த வேளையில் எதிர்பாராதவாறு எங்கிருந்தோ வந்த தேரை ஒன்று எகிறிக் குதித்து வந்து பாம்பின் வாயை ‘லபக்கென்று’ பற்றிக் கொண்டது.

**வேம்பு**

தேரை வாயிலிருந்து அந்த பாம்பு எவ்வளவோ போராடியிருக்கின்றது. முடியவில்லை. அந்தத் தேரையோ மற்ற தேரைகளிலிருந்து சற்று வித்தியாசமான முறையில் இருந்தது. பெரிய அளவில் இருந்தது. தேரையும் பிடித்த பிடியை விடவில்லை. பாம்பும் விடவில்லை. இப்படி இரண்டும் போராடுவதைப் பார்த்ததால் பிள்ளைகளும், அந்தப் பெண்ணும் கையைப் பிசைந்து கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளித்தனர்.

அந்த நேரத்தில் அந்த வீட்டிற்கு யாரோ இரண்டு பேர், சக்தி கன்னியப்பனைத் தேடிக்கொண்டு வந்தனர். “என்னம்மா! அப்பா இல்லையா?” என்று கேட்டனர்.

“அப்பா அலுவலகம் போயிருக்கிறார்” என்றனர்.

“அம்மா இல்லையா?” என்று கேட்டதற்கு, “அம்மா மருவத்தூருக்குப் போய் இருக்கிறார்” என்றனர்.

“சரி! நாங்கள் வந்து போனதாகத் தகவல் சொல்லி விடு!” என்று புறப்பட ஆயத்தமானார்கள்.

“கொஞ்சம் இப்படி உள்ளே வாருங்களேன். ஒரு பாம்பு வீட்டுக்குள் வந்துவிட்டது. பயமாக இருக்கிறது. அதை அடித்து விட்டுச் செல்லுங்களேன்” என்று பிள்ளைகள் அழைத்திருக்கிறார்கள்.

“பாம்பு..! எங்கே? என்றபடி உள்ளே நுழைந்தனர். அந்தத் தேரையின் பிடி இன்னும் தளரவில்லை. ஒரு கம்பை எடுத்துப் பாம்பை அடித்துவிட்டார்கள். தேரை எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது.

அடிபட்ட பாம்பைப் புரட்டிப் பார்த்தார்கள். அது இரண்டடி நீளமுள்ள ‘கொம்பேறி மூக்கன்’ பாம்பு என்று தெரிந்தது. “நல்லவேளை! நல்ல பாம்பாக இல்லாமல் போய்விட்டது” என்று சொல்லியபடி வந்தவர்கள் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டனர்.

கோயிலுக்குச் சென்று திரும்பி வந்த தாயிடம், நடந்த சம்பவங்களைப் பிள்ளைகள் கூறினர்.

“அம்மாவே கதி! என்று அப்பா ஓடியாடித் தொண்டு செய்கிறார். அதனால் நமக்கு எந்த ஆபத்தும் வராது. ஆபத்து வந்தால் அம்மா எப்படியாவது காப்பாற்றுவாள். எந்த ஆபத்து வந்தாலும் ஓம் சக்தி சொல்லு. மூல மந்திரம் சொல்லு. அடிகளார் 108 சொல்லு. எங்கிருந்தாலும் அம்மா ஓடி வந்து காப்பாற்றும்” என்றார் அந்தத் தாய்.

ஓம் சக்தி!



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

*பிறப்பின் பலனை நாம் ஒவ்வொருவரும் எப்போது அடைகிறோம் அம்மா…?*

வாழ்க்கையில் பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்று தனக்காக மட்டும் வாழாமல், பிறருக்காகவும் வாழ்ந்து, பிறருக்கு நன்மை ஏற்படும் வகையில் ஏதாவது உதவி செய்து, அதனால் பிறருக்கு மகிழ்ச்சி ஏற்படுவதைப் பார்க்கும்போது, நாமும் மனமகிழ்ச்சி அடையும்போது, பிறப்பின் பலனை அடைந்தது போன்ற உணர்வு ஏற்படும் போதுதான் ஒவ்வொருவரும் பிறவியின் பலனை அடைய முடியும். இதுபோன்ற மனநிறைவு சாதாரணமாக எல்லோருக்கும் கிட்டிவிடாது. பிறவியின் மூலம் எதையாவது சாதிக்க வேண்டும். பிறவியின் பலனே இறப்புக்குப் பின்தான் தெரியும். இறந்தவர்களைப் பற்றிப் பிறர் பேசுவதைக் கேட்கும்போதுதான் அவர் எப்படிப்பட்டவர் என்ற உண்மையைத் தெரிந்து கொள்ள முடியும். உற்றார் உறவினர் அல்லாதவர்கூட அவருக்காகக் கண்ணீர் சிந்தினால் அவர் பிறவியின் பலனை அடைந்தவர் என்று சொல்லலாம்.

*அம்மா! மனத்தைப் புடம்போட என்ன வழி?*

மனத்தைப் புடம்போட காலையில் விழித்ததும் உடனே எழுந்து வேலைகளைக் கவனிக்க ஓடக்கூடாது. ஒரு ஐந்து நிமிடம் உட்கார்ந்து “நாம் இன்றைக்கு என்ன செய்யப்போகிறோம்? அதை எப்படிச் செய்யப்போகிறோம்? அதை எப்படிச் செய்ய வேண்டும்? யாரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? யாரிடம் எப்படிப் பேச வேண்டும்? பிரச்சனைகள் வந்தால் எப்படிச் சமாளிக்க வேண்டும்? என்று சுயமாகச் சிந்தனை செய்ய வேண்டும். குறிப்பிட்ட விசேட நாட்களில் முடிந்தளவு 1 மணி நேரமாவது மௌனம் இருக்க வேண்டும். காலையில் அரை மணி நேரம் தியானத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும். பூசையறையில் 5 நிமிடமாவது நின்று வழிபாடு செய்ய வேண்டும். இவற்றைத் தவறாமல் கடைப்பிடித்து வந்தால் கட்டாயம் மனம் தூய்மையடைய வாய்ப்புண்டு.

## ஆன்மா உணர்த்தினாலும்…

**“ஆன்மா செய்யச் சொல்வதைச் செய்யப் பிடிக்காது.**
**ஆன்மா கேட்கச் சொல்வதைக் கேட்கப் பிடிக்காது.**
**பார்ப்போம்! ஆகட்டும்! என்று நினைத்தால் இறுதியில் அகற்றப்பட்டு விடுவீர்கள்.**
**ஆடுகிறவன், ஓடுகிறவன், சிரிக்கிறவன் எல்லோரும் ஒருநாள் அடங்கிவிடுவான்.”**

## விதையும் ஆன்மாவும்

**“விளைகிற நிலத்தில்தான் விதையை விதைக்க முடியும்.**
**ஒரே பூமியாக இருந்தாலும் மண்ணின் தன்மை மாறுபடுகிறது.**

**நல்ல மனம் என்ற நிலத்தில் ஆன்மா என்ற விதையை**
**விதைத்தால் பலன் கொடுக்கும்.”**

அன்னையின் அருள்வாக்கு

அருள்வாக்கும் அனுபவங்களும்:

# அமெரிக்க பக்தருக்கு நூறு ரூபாய் நோட்டு

அமெரிக்காவில் பணிபுரியும் தமிழக பக்தர் ஒருவர். அவர் அன்னையிடம் அருள்வாக்கு கேட்க 7.09.1978 வியாழனன்று வந்தார். அப்போதெல்லாம் வியாழக்கிழமை மாலை நேரத்தே அருள்வாக்கு சொல்லப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து வந்த அந்த அன்பரைப் பார்த்து அன்னை, “மகனே! பணத்தைத் தவிர எதற்கும் மதிப்புத்தராத நாட்டிலிருந்து நீ வந்திருக்கிறாய். இதோ பிடி” என்று கூறி ஒரு வேப்பிலையை எடுத்து அவர் கையில் போட்டாள்.

அன்னையின் கையில் வேப்பிலையாக இருந்த அது, அன்பர் கையில் விழும்போது புத்தம்புது ரூபாய் நோட்டாக மாறியது.

அந்த அன்பருக்கு எல்லையில்லாத ஆனந்தம்.

“தாயே! வேறு ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு, இதனை நானே எடுத்துக் கொள்ளட்டுமா?” என்று வேண்டினார்.

அதுகேட்ட அன்னை “மகனே! இது உனக்கு எதற்கு? இதனை இந்தத் தொண்டனிடம் கொடுத்துவிடு! அவன் இதனுடன் இன்னும் 101 ரூபாய் சேர்த்து, நாளை இங்கே என்னிடம் வரவுள்ள ஒரு பிராமணனுக்குக் கொடுத்து விடட்டும். நாளைக் காலை தன் மகள் திருமணம் எப்படியாவது நடந்து முடியவேண்டும் என்று என்னை வேண்டிக்கொள்ள வரப்போகிறான். அவனுக்குக் கொடுத்து விடட்டும்” என்றாள்.

## உற்பத்தியா? இடமாற்றமா?

அந்த வெளிநாட்டு அன்பருக்கு ஒரே வியப்பு. இந்த ரூபாய் நோட்டு எப்படி வந்தது? என்று அந்த ஆலயத் தொண்டரை வியப்புடன் பார்த்தார். உனக்கு இதுபோல் நடந்தது உண்டா? என்பதுபோல அவர் பார்வை இருந்தது. அந்தத் தொண்டர் அன்னையின் எதிரே எதுவும் கூறாமல் அமைதியாக இருந்தார்.

அந்த அன்பரை நோக்கி, “மகனே! இது எப்படி வந்தது? என்று உன் நாட்டு வழக்கப்படி ஆராய்ச்சி செய்கின்றாயா? ஏதோ அம்மா உற்பத்தி செய்துவிட்டாள் என்று எண்ணுகிறாயா..?”

“இல்லை மகனே! இல்லை. ஓரிடத்தில் இருப்பதை மற்றோரிடத்துக்கு வருமாறு செய்கிறேன். இன்று உலகம் போகிற போக்கில் நானும் ரூபாய் நோட்டை உற்பத்தி செய்யத் தொடங்கினால் உலகம் அழிந்துவிடும். இவ்வாறு பொருட்களை வரவழைப்பதை உற்பத்தி செய்கிறேன் என்று யாராவது சொன்னால் அதனை நம்பாதே!” என்று கூறி அனுப்பி வைத்தாள்.

## மறுநாள் வந்த பிராமணர்

மறுநாள் காலை 10.00 மணியளவில் ஒரு பிராமணர் தம் மகளோடு வந்தார். அவருக்கு 50 வயது இருக்கும். ஆலயத்தில் ஓர் அன்பரிடம் விசாரித்தார்.

“ஐயா! நான் காஞ்சிபுரம். என் மகள் திருமணம் தடைப்பட்டுக்கொண்டே போகிறது. இங்கு யாரோ அம்பாள் அருள்வாக்குச் சொல்வதாகக் கேள்விப்பட்டு வந்தேன். யாரிடம் கேட்டால் விவரம் சொல்வார்கள்?” என்றார்.

ஆலயத் தொண்டரை நோக்கிக் கை காட்டினார்கள்.

அவரிடம் வந்து விபரமெல்லாம் சொன்னார்.

“நீர் இன்று இங்கு வர இருப்பதை அம்பாள் நேற்றே அருள்வாக்கில் சொல்லிவிட்டாள். உங்களுக்கு 201 ரூபாய் கொடுக்கச் சொல்லி அம்பாள் உத்தரவு வாரும்!” எனச் சொல்லி கருவறைக்கு அழைத்துச் சென்று அம்மா கொடுத்த புது நூறு ரூபாய் நோட்டுடன், அறநிலையிலிருந்து 101 ரூபாய் சேர்த்துக் கொடுத்து அன்னையின் பிரசாதங்களையும் கொடுத்து அனுப்பி வைத்தார் ஆலயத் தொண்டர்.

ஓம் சக்தி!

## Brisbane - Mandrams - Upcoming Events – August 2018




**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த
**ஆதிபராசக்தி இணையத்தளம்**
**www.adhiparasakthi.co.uk**

**"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை**
**www.adhiparasakthi.co.uk என்ற**

**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

# Sydney - Mandrams - Upcoming Events – August 2018



**Melmaruvathur Swayambu Arulmihu
Annai Athiparasakthi Sitherpeedam NSW
Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead


| | | | |
|---|---|---|---|
| 03.08.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 10.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## ஆடிப்பூர பெருவிழா

### கஞ்சி வார்ப்பும் பாலாபிடேகமும்

**12.08.2018 – ஞாயிறு - மாலை 4.00 மணி**

**Westmead Public Primary School
Moree Street – Westmead**




| | | | |
|---|---|---|---|
| 17.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 24.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.08.2018 | SUNDAY – ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 31.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**ஆடி – அமாவாசை–பௌர்ணமி :**

ஆயள் விருத்தி உண்டாகும். அனைத்து செல்வங்களும் சேரும்.

**ஆவணி – அமாவாசை–பௌர்ணமி :**

புத்திரப்பேறு உண்டாகும்..
குழந்தைப்பேறு இல்லாத குறைநீங்கி
நல்ல மக்களைப் பெறும் அதிர்ஷ்டம் உண்டாகும்.

# “செய்வினை அழித்த குடும்ப நல வேள்வி”

## திருக்கோவிலூர் தொண்டர்:

திருக்கோவிலூரில் வசித்து வரும் அன்னையின் பக்தர் சக்தி பிரபாகரன். அவரது விரோதிகள் யாரோ சிலர், அவருக்குத் துன்பம் தரவேண்டிச் செய்வினை செய்து, யாரும் பார்க்காத இடத்தில் வீட்டின் வாசலில் ஒரு பொம்மையையும் கட்டி வைத்துவிட்டார்கள். அவ்வாறு கட்டப்பட்ட பிறகு அந்தக் குடும்பத்தில் பல பிரச்சனைகள் ஏற்பட்டன.

அது கட்டப்பட்ட அன்றே, அந்தக் குடும்பத்தார் பூசை செய்து வந்த குலதெய்வமான நாகர் சிலை காணாமல் போயிற்று.

குடும்பத்தினரிடையே அடிக்கடி கருத்து வேறுபாடுகளும், அடுக்கடுக்கான துன்பங்களும்தொடர்ந்தன. 10 ஆண்டுகளாக அந்தக் குடும்பம் படாத பாடு பட்டது.

## காலை எடுக்க வேண்டும்:

அந்த பொம்மை வீட்டு வாசலில் கட்ட்பட்ட சில நாட்களில் பிரபாகரன் மகனுக்குக் காலில் முள் குத்தி, அதன் காரணமாகப் புரையோடி, சென்னைக்குக் கொண்டு வந்து பெரிய டாக்டர்களிடம் காட்டினார்கள். ஒரு டாக்டர், பையனின் காலையே வெட்டி எடுக்க வேண்டும் என்று கூறிவிட்டார்.

## ஆன்மிககுரு அடிகளாரிடம் வேண்டினர்:

பிரபாகரன் மாமனாரும், மாமியாரும் அம்மாவின் பக்தர்கள். பேரனுடைய நிலையை விளக்கி, பேரனின் காலை எடுக்காமல் காப்பாற்றித் தருமாறு குருபிரானை வேண்டிக்கொண்டார்கள்.

அதன்பிறகு ஒரு நாள் அந்தப் பையனுக்கு உறக்கத்தில் ஒரு கனவு.

கனவில் நம் குருபிரான் வருகிறார். “உன் உடம்பு நன்றாகத்தான் இருக்கிறது. நீ எழுந்து நட!” என்று கட்டளையிட்டிருக்கிறார்கள்.

கனவு கண்ட கொஞ்ச நேரத்தில் பொழுது விடிந்தது. அடிகளார் கனவில் கூறியது நினைவுக்கு வந்தது. உடனே அவன் கட்டிலின் மேலேயே எழுந்து நடந்து பார்த்தான். இப்போது வலியே இல்லை. எகிறி எகிறிக் குதித்துப் பார்த்தான் வலியில்லை.

## குடும்பநல வேள்வி செய்தது:

பிரபாகரன் வீட்டில் குடும்பநல வேள்வி செய்யத் திட்டமிட்டு, ஒருநாள் வேள்விப்பூசையை ஆரம்பித்தார்கள்.

அந்தப்பூசை முடிவதற்கு முன்பாகவே, அந்த வீட்டில், பலகாரங்கள் செய்து கொடுக்க வந்த பிராமணப் பெண்மணி வீட்டு சாக்கடை செல்லும் குழாயில் ஏதோ ஒரு பொருள் கிடப்பதைப் பார்த்தாள். அது..! அந்தக் குடும்பத்தார் பூசித்து வந்த நாகர் சிலை! பத்தாண்டுகளாகக் கவனிப்பாரின்றிக் கிடந்ததால் பாசி முடிந்து உருத்தெரியாமல் கிடந்தது அது. அதனை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து பார்த்தபிறகுதான் அது நாகர் சிலை என்று தெரிந்தது.

வேள்விக்காகச் சுற்றுபூசை போடப்பட்ட உடனேயே, குலதெய்வச் சிலை கிடைத்தது பற்றிப் பிரபாகரன் குடும்பத்தார் சந்தோஷப்பட்டனர்.

## தாங்க முடியாத மிளகாய் நெடி:

சுற்றுப்பூசை முடிந்து வேள்விப்பூஜை தொடங்கப்பட்டது. யாக குண்டத்தில் கற்பூரத்தை ஏற்றி வைத்து, சமித்துக் குச்சிகளை வைத்துப் பற்றத் துவங்கியதும் தொண்டர்களுக்கு அதிர்ச்சி! ஆம்! வேள்வி துவங்கியதும் தாங்க முயாத மிளகாய் நெடி வீசியது! அது மட்டுமா..?

வேள்விக்குழுத் தொண்டர் சக்தி ருக்மணிக்கு உடம்பெல்லாம் எரிச்சல் ஏற்பட்டது. மிளகாயை அறைத்து உடம்பெல்லாம் பூசினால் எப்படியிருக்குமோ அப்படி ஓர் எரிச்சல்! உடனிருந்து வேள்விப்பணி செய்த மற்ற தொண்டர்களும் மிளகாய் நெடி தாங்க முடியாமல் அவ்விடத்தை விட்டு வெளியேறி வந்துவிட்டனர். யாகம் நடக்கும் இடத்தில் சக்தி ருக்மணி மற்றும் இருவர் மட்டுமே இருந்தனர்.

## கரும்புகையும் - கருப்பான உருவமும்:

யாக குண்டத்திலிருந்து கரும்புகை மிகுதியாக வந்து அந்த வீடு முழுவதும் சூழ்ந்துகொண்டது. உள்ளிருந்தவர்கள் புகையினால் திக்குமுக்காடினார்கள்.

அப்போது..
யாககுண்டத்திலிருந்து கருப்பான உருவம் ஒன்று ருக்மணியை நோக்கி வந்தது. வந்த உருவம் அவரை மோதித் தள்ளியது. உடனே மயங்கி விழுந்தார் சக்தி ருக்மணி.

(தொடர்ச்சி…10ஆம் பக்கம்)

## "செய்வினை அழித்த...

(9ஆம் பக்க தொடர்ச்சி)

அவ்வாறு சாய்ந்தபோதே.. தன்னை யாரோ தாங்கிய பிடிப்பதையும் உணர்ந்தார் சக்தி ருக்மணி. சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்தார்.

வேள்விப்பூசையில் கற்பூரத்தட்டையெடுத்து ஆராதனை காட்டி வந்த சக்தி ஹரிஹரனுக்கு அதற்கு மேல் அந்த இடத்தில் நிற்க முடியவில்லை என்று சொல்லியபடி, சக்தி ருக்மணியிடம் கற்பூரத்தட்டைக் கொடுத்துவிட்டு வெளியேறிவிட்டார்.

இன்னொரு தொண்டர் சக்தி கிருஷ்ணன், 'எனக்குக் கண் எரிச்சல் தாங்க முடியலேம்மா.." என்று ருக்மணியிடம் சொல்லிவிட்டு அவரும் போய்விட்டார். சமாளித்து நின்றபடி அங்கிருந்தவர் சக்தி ருக்மணி மட்டுமே..!

### மீண்டும் தாக்குதல்:

வேள்விப்பூசையைக் கவனித்து மேற்பார்வையிட்ட படியிருந்த சக்தி ருக்மணியை நோக்கி அந்தக் கருப்பு உருவம் மீண்டும் வந்து தாக்கியது. அவர் மீது மோதியது. அவரைத் தள்ளியது. அவரால் சமாளிக்க முடியவில்லை. அப்போது அவரைத் தாங்கிப் பிடித்துக்கொள்ள அம்மா வந்து நின்றாள். அம்மாவின் திருவுருவம் கண்களுக்கு இப்போது தெளிவாகவே தெரிந்தது.

அந்தக் கருப்பு உருவத்தை நோக்கி கை நீட்டிப் போ! போ! என்று அதட்டி விரட்டியடித்தாள். அந்தக் கருப்பு உருவம் வெளிவாசலை நோக்கிப் போயிற்று. வீட்டை விட்டு வெளியேறி மறைந்து போயிற்று.

### இரவெல்லாம் மிளகாய் நெடி:

சக்தி ருக்மணிக்கு வேள்வி முடியும் வரை எரிச்சலும் கண் எரிச்சலும் இருந்தன. மற்ற தொண்டர்களால் நிற்க முடியவில்லை. எனவே, சக்தி ருக்மணி தானே தனித்து நின்று சமாளித்தபடி வேள்விப்பூசையை முடித்தார்.

வேள்வி முடிந்த பின்பு அன்றிரவு முழுவதும் அந்த வீட்டில் மிளகாய் நெடி தொடர்ந்து இருந்தது.

### ஆஸ்துமா நீங்கியது:

அந்த வேள்விப்பூசையில் அன்னையின் திருவுருவப்படத்திற்கு அர்ச்சனை செய்து கொண்டிருந்தார் ஒரு பெண்மணி. அவருக்கு ஏற்கனவே ஆஸ்துமா நோய்! இப்பூசையில் கலந்துகொண்டு அர்ச்சனை செய்ததன் பயனாக அவரை வாட்டி வதைத்த ஆஸ்துமா நோய் நீங்கியது.

அந்தக் குடும்ப நல வேள்வி முடிந்த பிறகு பிரபாகனுக்குத் தற்போது எந்தக் குறையும் இல்லை. சுபிட்சமாக வாழ்ந்து வருகிறார்.

பிரபாகரன் எதிரிகள் அந்தச் செய்வினை பொம்மைக்கு மந்திர உரு ஏற்றி அதை வீட்டு வாசலில் கட்டியதும், பிரபாகரன் குடும்பத்துக்குப் பல துன்பங்கள் தொடர்ந்தன. முதலில் ஏதோ ஒரு தீய சக்தி அந்த வீட்டில் புகுந்தது. அந்தக் குடும்பத்தாரின் குலதெய்வச் சிலையை ஒளித்து வைத்தது. குலதெய்வ வழிபாடு இல்லாமல் செய்தது. அந்த வீட்டுப் பையனின் காலில் முள் தைத்து, காலையே எடுக்க வேண்டிய அளவுக்கு முற்றியது. கனவில் அம்மா வந்து அருள் செய்தாள். பையன் குணமடைந்தான்.

அந்தக் குடும்பத்தில் குடும்ப நல வேள்விக்காக, வேள்விக்குழுத் தொண்டர்களைச் சந்திக்கச் சென்றபோது மூன்று முறையும் சந்திக்க முடியாமல் தடை ஏற்பட்டது.

வேள்வி நடந்த நாளன்று தொண்டர்கள் பூசை செய்ய முடியாமல் அந்தத் தீய சக்தி தடை ஏற்படுத்தியது. அதன் விளைவாகவே மிளகாய் நெடி வந்தது. எனினும் அம்மாவின் திருவருள் இடையில் புகுந்து சக்தி ருக்மணியைக் காப்பாற்றி அந்தத் தீய சக்தியை விரட்டியடித்தது.

அம்மா அங்கு வெளிப்பட்டுத் தன் தொண்டர்களுக்கு அந்தத் தீயசக்தியால் ஆபத்து ஏற்படாமல் காப்பாற்றினாள்.

எனவே அன்னை அருளிய முறைப்படி, பயபக்தியோடும், சிரத்தையோடும், எச்சரிக்கையோடும் வேள்வி செய்கிற இடங்களில் தீய சக்திகளால் ஆபத்து வந்தால் அம்மா ஏதோ ஒரு வகையில் வந்து தொண்டர்களைக் காக்கிறாள். வேள்வி செய்யப்பட்ட குடும்பத்துக்கும் அருள்பாலிக்கிறாள்.

ஓம் சக்தி!

# Divine Miracles at Melmaruvathur

## Heights of fortune:

In the annual day function of Villupuram Adhi Parasakthi Vazhipattu Mandram, a Chettiar devotee explained his experiences as follows:

“Once upon a time, I had a very happy life, had everything for a happy life, suddenly I was pushed to great depths. Mothe was with me and solved all my problems.

He wa a very famous man in that area. He had good busine and earned good mney.

Suddenly he had a drift with his brothe. They were fighting a common property. The relatives were divided in their support. As a result of these there were external problems too like tax summons, pressure from debtors etc. This man was almost immersed in trouble. His brother wa trying to take advantage of the situation. Chettiar had to sell some of his properties for throw away prices and pay off his debts. Some properties were mortgaged. At that juncture somebody suggested that he could visit Melmaruvathur. He came to Maruvathur on 17.02.1980 and listened to revelation.

Mother said, “My son! I know you are suffering like a small flower thrown on fire. Do not worry. Very soon your properties will be divided and you will get your shares”.

Time passed. He was coming out of his problems one by one with the help of friends and well wishers. Properties were divided. Chettiar started a new business and lived happily. This was narrated amidst tears and said anything could be made possible if Mother’s blessings are with them.

***


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.


Address: Editor,‘Sakthi Oli’ Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

# Sydney - Mandrams - Upcoming Events – August 2018



## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்
## Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre

Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 03.08.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 10.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## ஆடிப்பூரம் - கஞ்சி வார்ப்பும் பாலாபிடேகமும்

**17.08.2018**

**வெள்ளிக்கிழமை - மாலை 6.00 மணி**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 24.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.08.2018 | SUNDAY – ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 31.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

*ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!*



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

*ஆலய சிறப்பு விழாக்கள்*

## 2018 - ஸ்ரீ விளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடி | 26 | 11.08.2018 | சனி | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 27 | 12.08.2018 | ஞாயிறு | **சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| ஆடி | 28 | 13.08.2018 | திங்கள் | **சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| ஆவணி | 10 | 26.08.2018 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 25 | 09.09.2018 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 08 | 24.09.2018 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 22 | 08.10.2018 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 23 | 09.10.2018 | செவ்வாய் | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| ஐப்பசி | 07 | 24.10.2018 | புதன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 21 | 07.11.2018 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 7 | 23.11.2018 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 20 | 06.12.2018 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 7 | 22.12.2018 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 10 | 25.12.2018 | செவ்வாய் | **கிறிஸ்மஸ்** |

# Melbourne - Mandrams – Upcoming Events – August 2018

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram

## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)

விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com

Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

### கூட்டு வழிபாடுகள்:

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 03.08.2018 | Friday | ஆடி | 18 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 05.08.2018 | Sunday | ஆடி | 20 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 10.08.2018 | Friday | ஆடி | 25 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 12.08.2018 | Sunday | ஆடி | 27 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 17.08.2018 | Friday | ஆவணி | 01 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |




| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 24.08.2018 | Friday | ஆவணி | 08 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 26.08.2018 | Sunday | ஆவணி | 10 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 31.08.2018 | Friday | ஆவணி | 15 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |

**11.08.2018 – சனி - அமாவாசை, 26.08.2018 – ஞாயிறு - பௌர்ணமி**

## ஆன்மிககுரு
## அருள்திரு அடிகளார் அருளிய
# குரு உபதேசங்கள்



### உபதேசம் பெறுவது பற்றி...

“என் மூலம் உபதேசம் பெற வேண்டும் என்று நினைக்கிறார்கள். எல்லோருக்கும் எளிதாக உபதேசம் கொடுத்து விட முடியாது. அவர்கள் பக்குவம் என்ன? பக்தி என்ன என்பதெல்லாம் பார்க்க வேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் தயாராக வேண்டும்.

இரண்டு பேர்க்கு மட்டுமே உபதேசம் கொடுத்தேன். அதனை அவர்கள் எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும்.”

### ஒவ்வொருவர் உள்ளேயும் அம்மா

“ஒவ்வொருவர் உள்ளேயும் அம்மா இருக்கிறாள். எனக்குத் தெரியும். என்னுள்ளே அம்மா இருப்பது உங்களுக்குத் தெரியாது. அது தான் நமக்குள்ளே இருக்கிற வித்தியாசம்.! உங்கள் முற்பிறவி, உங்கள் துன்பம், அதற்கான காரணங்கள் எல்லாம் தான் தெரிகின்றன. ஆனாலும் அவற்றையெல்லாம் நான் சொல்லக்கூடாது. அவை இரகசியம்!”.

## காஞ்சிபுரம் மன்றத்தாருக்கு அறிவுரை

உலகில் உள்ள அனைத்து
வார வழிபாட்டு மன்றங்களுக்கும் பொருந்தும்

ஒரு முறை காஞ்சிபுரம் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தாருக்கு தொண்டு பற்றி அன்னை கூறிய அறிவுரை உலகில் உள்ள அனைத்து வார வழிபாட்டு மன்றத்தாருக்கும் பொருந்தும்.

“மகளே! உங்கள் மன்றத்தைச் சார்ந்தவர்கள் இல்லத்தில் பெரிய காரியம் (சாவு-இறப்பு) நடந்தால் நீங்கள் அனைவரும் சென்று கலந்துகொள்ள வேண்டும். மன்றத்தில் கலசம் நிறுத்தி, வழிபாடு செய்து, அந்தக் கலசத்தேங்காயுடன் எடுத்துக்கொண்டு, ஒரு செவ்வாடையும், பூமாலையும் வாங்கிக்கொண்டு அந்த இடத்திற்கு நீங்கள் செவ்வாடையுடன் போய்ச் சித்தர் பீடத்தின் சார்பில் மரியாதை செய்யுங்கள்.

ஆரம்பம் முதல் கடைசி வரை அங்கிருந்து சடலத்தைக் குளிப்பாட்டி முடித்தவுடன் நீங்கள் பூசை செய்த கலச நீரை இறுதியாக ஊற்றிக் குளிப்பாட்டிவிட்டுச் செவ்வாடை சார்த்தி, மாலையணிவித்து, தேங்காய் உடைத்து, கற்பூரம் ஏற்றி, 108 மந்திரம் ஓதி, சடலத்தை வெளியில் எடுத்துக்கொண்டு செல்லுங்கள். முடிந்தால் இடுகாடு வரை போய் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளுங்கள்” என்று அறிவுறுத்தினாள் அன்னை..

## Melbourne - Mandrams – Upcoming Events – August 2018



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 03.08.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 10.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**12.08.2014**

SUNIDAY –
ஞாயிறு 10.00a.m.

Highvale Secondary College
Glen Waverley

## ஆடிப்பூர பெருவிழா

கஞ்சி வார்த்தலும்
சுயம்புவிற்கு பாலாபிடேகமும்
கூட்டு வழிபாடு-Joint Prayer

அனைவரும் வருக! அன்னையின் அருள்வளம் பெறுக!

| | | | |
|---|---|---|---|
| 17.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 24.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.08.2018 | SUNDAY – ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 31.08.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Lalor

**Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)

May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

## Why Such Festivals like Aadipooram:

**"Festivals like Áadipooram'are meant to give you peace and quietness, since you lead an aimless life thinking that someday, some family some fate, some sakthi some kind of relationship and so on.**

**Nature is based on the seasons. Similarly festivals like Aadipooram are devised to mitigate the sins committed by human beings"**

*-Melmaruvathur Amma's Oracle*

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 03.08.2018 | வெள்ளி | ஆடி | 18 | **ஷஷ்டி விரதம்** |
| 05.08.2018 | ஞாயிறு | ஆடி | 20 | **கார்த்திகை விரதம்** |
| 07.08.2018 | செவ்வாய் | ஆடி | 22 | 4ஆம் ஆடிச் செவ்வாய் - ஏகாதசி விரதம் |
| 09.08.2018 | வியாழன் | ஆடி | 24 | பிரதோஷ விரதம் |
| 11.08.2018 | வெள்ளி | ஆடி | 25 | **ஆடி அமாவாசை விரதம் -**<br>**அமாவாசை வேள்வி – மேல்மருவத்தூர்** |
| 12.08.2018<br>13.08.2018 | ஞாயிறு<br>திங்கள் | ஆடி | 27<br>28 | **மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில்**<br>**47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| 14.08.2018 | செவ்வாய் | ஆடி | 29 | நாகசதுர்த்தி விரதம்<br>5ஆம் ஆடிச் செவ்வாய் |
| 15.08.2018 | புதன் | ஆடி | 30 | நாக பஞ்சமி – கருட பஞ்சமி |
| 16.08.2018 | வியாழன் | ஆடி | 31 | ஷஷ்டி விரதம்<br>கொடியேற்றம் - நல்லூர் கந்தசுவாமி கோவில்<br>ஸ்ரீ விஷ்ணு பிரமோற்சவம் - **கொடியேற்றம்**<br>ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ் - மெல்போர்ண் |
| 22.08.2018 | புதன் | ஆவணி | 06 | ஏகாதசி விரதம் |
| 23.08.2018 | வியாழன் | ஆவணி | 07 | பிரதோஷ விரதம் |
| 24.08.2018 | வெள்ளி | ஆவணி | 08 | வரலக்ஷ்மி விரதம் - ஆவணி ஓணம்<br>ஸ்ரீ விஷ்ணு பிரமோற்சவம் - **விஷ்ணு இரதோற்சவம்**<br>ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ் - மெல்போர்ண் |
| 25.08.2018 | சனி | ஆவணி | 09 | ஸ்ரீ விஷ்ணு பிரமோற்சவம் - **தீர்த்தோற்சவம்**<br>ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ் - மெல்போர்ண் |
| 26.08.2018 | ஞாயிறு | ஆவணி | 10 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 30.08.2018 | வியாழன் | ஆவணி | 14 | மஹா சங்கடஹர சதுர்த்தி |
| 31.08.2018 | வெள்ளி | ஆவணி | 15 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் - சிட்னி |
| 02.09.2018 | ஞாயிறு | ஆவணி | 17 | கிருஷ்ண ஜெயந்தி – கோகுலாஷ்டமி – கார்த்திகை விரதம் |
| 06.09.2018 | வியாழன் | ஆவணி | 21 | ஏகாதசி விரதம் |
| 07.09.2018 | வெள்ளி | ஆவணி | 22 | பிரதோஷ விரதம் |
| 08.09.2018 | சனி | ஆவணி | 23 | தேர் - நல்லூர் கந்தசுவாமி கோவில் |
| 13.09.2018 | வியாழன் | ஆவணி | 28 | **விநாயகர் சதுர்த்தி** |
| 22.09.2018 | சனி | புரட்டாசி | 06 | 1ஆம் புரட்டாசி சனி |
| 24.09.2018 | திங்கள் | புரட்டாசி | 08 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 28.09.2018 | வெள்ளி | புரட்டாசி | 12 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் - சிட்னி |
| 29.09.2018 | சனி | புரட்டாசி | 13 | 2ஆம் புரட்டாசி சனி |
| 06.10.2018 | சனி | புரட்டாசி | 20 | 3ஆம் புரட்டாசி சனி |
| 09.10.2018 | செவ்வாய் | புரட்டாசி | 23 | நவராத்திரி ஆரம்பம் |
| 13.10.2018 | சனி | புரட்டாசி | 27 | 4ஆம் புரட்டாசி சனி |
| 18.10.2018 | வியாழன் | ஐப்பசி | 01 | சரஸ்வதி பூஜை - ஆயுத பூஜை |
| 19.10.2018 | வெள்ளி | ஐப்பசி | 02 | விஜயதசமி |
| 24.10.2018 | புதன் | ஐப்பசி | 07 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 26.10.2018 | வெள்ளி | ஐப்பசி | 09 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 06.11.2018 | செவ்வாய் | ஐப்பசி | 20 | தீபாவளி |